# மனுஷ்யபுத்திரனின் கவிதைகளில் இயற்கை

**இரா.செல்வராணி**
(முனைவர் பட்ட ஆய்வாளர்) பகுதி நேரப் பேராசிரியர்
தமிழ்துறை, மதுரை காமராஜர் பல்கலைக் கழகக் கல்லூரி
மதுரை

**முனைவர்.சோ.இரவி**
(முனைவர் பட்ட நெறியாளர்) தமிழ்துறைத் தலைவர்
சரஸ்வதி நாராயணன் கல்லூரி
மதுரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

கவிஞர் மனுஷ்யபுத்திரன் சமூகப்பிரச்சனைகளை மட்டும் பாடும் கவிஞனாக இல்லாமல் இயற்கையின் அழகை இரசித்தும், உள்ளீடுகளை பலபடியாக விரித்துக் காட்டியும், வியந்து போற்றியும் மனித உணர்வுகளை செயல்களை குறியீடாகக்காடட இயற்கையைப் பயன்படுத்துகின்றார். இதனை விவரித்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பாக வெயில், நிலவு, மழை ஆகியவற்ழற மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் இடம்பெறும் பகுதிகளை இங்கு காண்போம்.

**வெயிலைப் பழகுதல்**

மனுஷ்யபுத்திரன் உக்கிரமாக வெயிலை நேசித்துப் பழக யோசித்து வழிசொல்கிறார்.

**“வெயிலின் முழுமையாக**
**உக்கிரத்தில்**
**யாரோ சிகரெட் புகையை**
**ஆழமாக உள்ளிழுத்து விடுகிறார்கள்**
**யாரோ சூடான காபியை**
**அருந்துகிறார்கள்**
**யாரோ செருப்பில்லாமல்**
**நடந்து போகிறார்கள்**
**யாரோ பெட்ரோலை ஊற்றி**
**தங்களைத் தாங்களே**
**கொளுத்திக் கொள்கிறார்கள்”**

இப்படி இவர்கள் எல்லாம் வெயிலோடு உறவாடி வாழ்கின்ற பொழுது நமக்கும் அது சாத்தியமே என்பார் மனுஷ்யபுத்திரன். நம்மோடு பழகி உறவை முறித்துக் கொண்டு செல்பவர்களுக்கு பரிசுகள் தந்து அனுப்புங்கள் நினைவுகளை தருகின்ற பரிசுகளைத் தாருங்கள்.

**“நீங்கள் அவருக்கு**
**இந்த நாளில் அருந்துவதற்கு**
**ஓரே ஒரு கோப்பை**
**வெயிலைக் கொடுங்கள்**
**இவ்வளவு வெயிலிருந்து**
**ஓரே ஒரு துண்டு வெயிலை**

**வெட்டியெடுத்து**
**அவருக்குப் பரிசளியுங்கள்**
**முடிந்தால் இந்த வெயிலின்**
**முத்தமொன்றை அவருக்குக் கொடுங்கள்**
**வெயில் நினைவுகளைக் கொல்பவை**
**அதற்குமேல்**
**அவர் வேறு எதையும் உங்களிடம்**
**திரும்ப கேட்க மாட்டார்"**

**வெயிலின் காமரூபம்**

வெய்யில் ஆடை குறைவாக அணிவதையே விரும்புகிறது. வெய்யிலையே ஆடையாக அணிந்து கொள்ள முடிந்தால் மக்கள் நிர்வாணமாக நீருக்கு அடியில் மூழ்சிக்கிடப்பதையே விரும்புவார்கள் என்ற மனுஷ்யபுத்திரன்,

**"வெய்யில் அவ்வளவு வேகமாகக்**
**களைகிறது**
**ஒரு சிறு பெண்ணின் ஆடைகளை**
**வெய்யில் எங்கெங்கும்**
**காம ரூபமாக இருக்கிறது**
**ஆனால் கவிஞர்கள்**
**இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்**
**நிலவொளியின் போகங்களையே"**

என்பார். நிலவைவிட வெய்யிலே காமரூபமாக அலைகிறது என்பதை நினைவூட்ட மற்றொரு கவிதையில்,

**"இந்த மத்தியான வெயிலின்**
**தகிப்பில்**
**என்னால் ஒரு நிமிடம்**
**இந்தக் கடற்கரையில்**
**நிற்க முடியவில்லை**
**காதலர்கள் இருவர்**
**சுடும் மணலில்**
**ஒருவர் இருப்பை**
**மற்றவர் அணைத்தபடி**
**நிதானமாக கடலை**
**நடந்து சென்று கொண்டிருந்தனர்**
**ஒரு கனம்**
**நானும் வெயிலும்**
**தனியாகத் திகைத்து நின்றோம்**
**பிறகு வெயிலின் இடுப்பை நானும்**
**எனது இடுப்பை வெயிலும்**
**ஆதரவாக அணைத்துக் கொண்டோம1**

என்பார்.

**காத்திருந்த வெயில்**

வேலை முடிந்து வீடு திரும்பும் பொழுது தாய், தந்தை, சகோதரி, மனைவி, குழந்தை இப்படி யாரோ ஒருவர் நம்வருகை எதிர்பார்த்து காத்திருக்லாம். ஆனால், மனுஷ்யபுத்திரன் தனிமைத் துயர்போக்க காத்திருப்பது இவர்களில் யாருமல்ல சான்றாக,

**"சிலருக்கு வீடு திரும்பும் போது**
**வாசலில் பவழ மல்லிகள்**

**உதிர்ந்து கிடக்கின்றன**
**வேறு சிலருக்கு**
**பறவையின் இறகுகள்**
**உதிர்ந்து கிடக்கின்றன**
**உன் காதலியின்**
**உன் ஜோடிக் காலணிகள்**
**வாசற்படியில் காத்திருக்கலாம்**
**எனக்காக எப்போதும்**
**நான் திரும்பும்போதும்**
**காத்துக் கொண்டிருப்பது**
**இந்த வெய்யில்"**

என்பார். 'எனக்காக எப்போதும்' என்பதில் கவிஞரின் துயரம் வெளிப்படுவதை நம் உணரலாம்.

**மூத்த வெயில்**

வெயிலின் கொடுமையை உக்கிரத்தை தவிர்க்கத் துடிக்கும் மனுஷ்யபுத்திரனின் மணம் 'யாராவது உதவுங்கள் சீக்கிரம் சாலையை கடக்கட்டும் மூத்த வெயில்' என்பார். வெயிலால் தமக்கு ஏற்படும் துன்பத்தை கூறாமல் மூத்த வெயிலுக்காக பரிதாபப்படுவது அழகின் உச்சம். சான்றாக,

**"இந்த வெயிலுக்கு**
**சாலையைக் கடக்க**
**யாரவது உதவுங்கள்**
**ரொம்ப நேரமாய்**
**பரிதவித்து**
**ஒரே இடத்தில்**
**நின்று கொண்டிருக்கிறது**
**மூப்பு வந்துவிட்டு**
**அவ்வளவு பழைய வெயில்"**

என்பார். மேலும்,

**"வெயில் வந்துவிட்டது**
**அவ்வளவு வெளிப்படையாக**
**அவ்வளவு தெளிவாக**
**அவ்வளவு நாசூக்காக**
**அவ்வளவு கறாராக**
**அவ்வளவு எதார்த்தமாக**
**அவ்வளவு கசகசப்பாக**
**வெயில் வந்துவிட்டது"**

வெயிலை இவ்வளவு நேர்த்தியாக கவிஞரால் மட்டுமே வர்ணிக்கமுடியும்.

**பௌர்ணமி நிலவு**

தன்னை மாய்த்துக் கொள்ள வந்தவன் இயற்கை அழகில் மயங்குவதும் மனம் மாறுவதும் நாம்வாழ ஏதோ ஒருகாரணம் எங்கும் நிரம்பித்தான் கிடக்கின்றன இந்த பூமியில் என்பதை மனுஷ்யபுத்திரன்,

**"இந்தப் பாழும் கிணற்றில்**
**கல்லைக் கட்டிக் கொண்டு**
**குத்திக்கத்தான் வந்தேன்**
**இன்றைக்குப் பாத்தா**
**பௌர்ணமி நிலவு**
**தண்ணீர்மேல்**
**இப்படித்**

**ததும்பிக் கொண்டிருக்க வேண்டும்?"**

என்பார்.

நிலவைப் பாடாத கவிஞனில்லை ஆனால் மனுஷ்யபுத்திரனின் சிந்தனையோ வேறுவிதமாக அமைந்துள்ளது. சான்றாக,

**"இப்போது**
**நான் காணும் நிலவு**
**ஒரு பெரிய தூக்க மாத்திரையாக இருக்கிறது**
**எப்படி விழுங்குவது என்று தான்**
**தெரியவில்லை"**

எனவும் மெதுவாக ஊர்ந்துசெல்லும் நிலவொளி அச்சத்தைத் தரும் திருடனுக்கே அச்சத்தைத் தருவதாக சிந்தனை செய்வது கவிஞரின் மனநிலையும் திருடனின் மனநிலையும் நேர்க்கோட்டில் பயணிப்பதற்கு சான்றாக,

**"காங்க்ரிட் கூரையில்**
**மெல்ல நடந்து செல்கிறான்**
**திருடன்**
**அவனைவிட**
**மெதுவாக நடந்து செல்லும்**
**நிலா வெளிச்சத்தைக் கண்டு**
**ஒரு கணம் பயப்படுகிறான்"**

என்ற கவிதையை கூறலாம்.

**மழை! மழை!!**

மழையில் நனைவது சுகம். மழையை குடையில் இருந்து கொண்டு இரசிப்பது சுகம். மழையில் நனையாமல் நின்று கொண்டு கைகளில் மட்டும் வாங்கிச் சிதறுவது சுகம். ஆனால், மனுஷ்யபுத்திரன் கவிதையில் இந்த இரசிப்புக்கு அப்பாற்பட்டு நின்று மனதை நனையவைக்கிறது ஒரு கவிதை,

**"மழையில்**
**தனியாகவா வந்தாய்**
**என்றேன்**
**தலையைத் துவட்டிக் கொண்டே**
**'இல்லை**
**மழையும் கூடவே வந்தது'**
**என்றாள் அம்மு"**

இந்தக் கவிதையில் மழலையின் எதார்த்தமும் மனுஷ்யபுத்திரனின் கவித்துவமும் வெளிப்படுகிறது எனலாம். மற்றொரு கவிதையில் மழைத்துளியை படம் பிடிப்பது பற்றிப் பேசுகிறார்.

**"மழையில் நனையும்**
**ஒரு சுவரையோ**
**காகிதத்தையோ**
**சாலைகளையோ**
**புகைப்படம் எடுக்க முடிவது போல**
**ஒரு மழைத்துளியை**
**அதன் தூயவடிவில்**
**படம் எடுக்க முடிவதில்லை"**

என்பார். மழை ஏதாவது ஒன்றின் மேல் பெய்கிறது அல்லது ஒன்றின் முன்பாகவோ, பின்பாகவோ பெய்கிறது ஒரு பின்புலம் இல்லாமல் மழையை எப்படி பார்ப்பது இரசிப்பது என்று புரியாத மனுஷ்யபுத்திரன்,

**"மேலும்**
**நான் பார்த்த மழைத்துளியும்**
**நான் படம் பிடித்த மழைத்துளியும்**
**ஒரு போதும்**
**ஒன்றாக இருப்பதில்லை"**

என இயற்கையின் பேரழகையும் எந்த விஞ்ஞான வட்டதிற்குள்ளும் வசப்படாத உன்னதத்தையும் உணர்த்தும் கவியாக இதனைக் காணலாம்.

**இரண்டு மழைத்துளிகள்**

மழைத்துளி வேண்டும். இரண்டே இரண்டு மழைத்துளிகள் வேண்டும். பின்னர் மற்றொரு மழைக்காலம் வரை காத்திருப்பேன் என கூறுவது மனுஷ்யபுத்திரனின் விபரித ஆசையா? வினோத ஆசையா? என நாம் குழம்புகிற வேளையில் அவர் தெளிந்த சிந்தனையுடன்,

**“என்னிடம்**
**இரண்டு**
**மழைத்துளிகள் இருந்தால்**
**ஒன்றை**
**ஒரு தானியத்தின் மேல்**
**விழச்செய்வேன்**
**இன்னொன்றை**
**ஒரு சொல்லின் மீது**
**பிறகு நான்**
**ஒரு மழைக்காலம் முழுக்க**
**சும்மா இருந்துவிடுவேன்“**

என்பார். மழைத்துளி எதன்மீது வீழ்கிறதோ அதை நெகிழச்செய்கிறது பின்னர் முளைவிடச் செய்கிறது. தானியமும் சொல்லும் உயிர்பெற்று கிளர்ந்தெழும் என்பதை மிகநுட்பமாக இங்கு பதிவுசெய்வதை காணமுடிகிறது.

**மழையை அறிதல்**

மழை நம்மை நனைக்கிறது. அது கடந்து செல்லும் பாதையில் வழிபட்டதை எல்லாம் நனைக்கிறது. நம்மை நனைக்கும் மழையை முழுமையாக அறிய மனுஷ்யபுத்திரன் விரும்புகிறார். இதனை,

**“நிறைய நனைந்தேன்**
**இன்றைய மழையிலும்**
**மழையை விடவும்**
**அதிகமாக**
**மழையில் நனைந்துவிட்டேன்**
**மழை நின்ற பிறகும்கூட**
**மழையில் நனைந்து கொண்டிருக்கிறேன்**
**…………………………..**
**ஆனால்**
**ஒரு முறை கூட**
**மழையை**
**முழுமையாய் தொட்டுப்பார்க்க**
**மழை அனுமதிக்கவே இல்லை”**

என மனுஷ்யபுத்திரன் முழுமையாய் தொட்டுப்பார்த்து ஆசை கொள்வதும் மழை அனுமதிக்கவில்லை என்பதும் தலைவனிடம் தலைவி நாணம் கொண்டு அனுமதிக்க மறுக்கும் காட்சியை நமக்கு நினைவூட்டுகிறது.

**நகரத்தில் மழை**

மழை நகரத்தில் சற்று அதிகரித்துவிட்டால் ஒரு நல்ல செய்தியைக் கூட கேட்க முடிவதில்லை. மின்சாரம் நின்று விடுகிறது. ஆட்டோக்கள் வருவதில்லை,தாழ்வான பகுதிகள் மிதக்கின்றன. நகரம் மிகப் பெரிய சாக்கடையாக மாறுகிறது. காய்கறிகள் விலை அதிகரிக்கிறது. மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறுகிறார்கள் அமைச்சர்கள் போரின் விளைவுகளைப் பார்ப்பதுபோல பார்க்கிறார்கள். நிவாரணப் பொருட்களுக்காக மக்கள் போராடுகிறார்கள். நகரில் பெய்த மழை நகரை அழிப்பதற்காக

பெய்த மழையாகவே எப்பொழுதும் காலம்காலமாக சித்தரிக்கிறார்கள் என்ற மனுஷ்யபுத்திரன் நகரவாசிகளின் மற்றொரு பக்கத்தையும் காட்கின்றார். சான்றாக,

**“ஆனால்**
**நகரவாசிகள் மனம் கிளர்கிறார்கள்**
**ஒரு அற்புதமான சிகரெட்டைப் புகைகிறார்கள்**
**ஒரு அற்புதமான தேநீரை அருந்துகிறார்கள்**
**ஒரு அற்புதமான முத்தத்தை இடுகிறார்கள்**
**ஏதோ ஒரு கணம்**
**மழைக்குத் தம்மை**
**முழுமையாகத் தருகிறார்கள்”**

என்பார். இக்கவிதையில் நகரத்தில் பெய்யும் மழை நரகத்தைத் மட்டும் தருவதில்லை மகிழ்ச்சியையும் தந்துவிட்டுதான் செல்கின்றன என்பார்.

**வேட்டை நிலங்களின் மழை**

‘வேட்டை நிலங்களின் மழை’ என்ற கவிதையில் வாழ்வின் முரண்களை மிகஅழகாக பதிவுசெய்வார். ஒருவர்க்கு மகிழ்ச்சியென கருதுவது மற்றொருவர்க்கு துன்பமென கருத இடமுண்டு எல்லா நிகழ்வுகளும் மகிழ்ச்சி தருவதில்லை மகிழ்ச்சியென நாம் கருதுவது மற்றவர்க்கு துன்பமாக இருக்க வாய்புண்டு. இதனை,

**“நமக்கு**
**மழை என்பது அன்பு**
**மழை என்பது கருணை**
**மழை என்பது காதல்**
**மழை என்பது ஈரம்”**

என்பார். ஆனால், மழை என்பது மற்ற உயிரினங்களுக்கு வேட்டை நிலமாக மாறுகிறது இதனை,

**“மழை துவங்குவதற்கு முன்பு**
**அலை அலையாக**
**வீட்டில் பூச்சிகள் கிளம்பிவிடுகின்றன**
**வீட்டில் பூச்சிகளை வேட்டையாட**
**எங்கெங்கோ பதுங்கியிருந்த பல்லிகள்**
**கூட்டம் கூட்டமாக வெளியே வருகின்றன**
**ஒரு பல்லியின் வாயில் துடிக்கும்**
**வீட்டில் பூச்சியை**
**இன்னொரு வீட்டின் பூச்சி**
**குழப்பத்துடன் வேடிக்கை பார்த்துகொண்டிருக்கிறது.**
**…………………………**
**மழை துவங்கும்போது**
**பல்லிகள் பசி தீர்த்து அமைதியிலும்**
**வீட்டில் பூச்சிகள் பறத்திலின் துயரம் தீர்த்த**
**மரணத்தின் அமைதியிலும்**
**தூங்கத் தொடங்கியிருந்தன”**

என பதிவு செய்கின்றார். கருணை, அன்பு, காதல், ஈரம் எதுவுமில்லாத வேட்டை நிலமாக வீடு மாறுவதை வெவ்வேறு உலகமாக பிரித்துக் காண்பது மனுஷ்யபுத்திரனின் கவித்திறன் எனலாம்.

**இயற்கைக்குத் திரும்புதல்**

கடல் மட்டத்திலிருந்து ஐயாயிரம் அடி உயரத்தில் மலைமீது கானக பாதையில் அழைத்துச்சென்ற வனக் காவலாளி கூறினான். இது அபூர்வமான கிழங்கு எப்போதாவது கிடைக்கும் சாப்பிட்டவர்களுக்கு இருபதாண்டு ஆயுள் கூடும். மேலும் சிறிய நீர்நிலையைக் காட்டி பரிசுத்தமான தண்ணீர், இது

தரையில் எங்கும் கிடைக்காது என்றான். மனுஷ்யபுத்திரனுக்கோ ஆச்சரியம் !வியப்பு! கிழங்கு மற்றும் நீரின் அருமை உணர்ந்தால் அல்ல.

**"வனத்தின் குரங்குகள்**
**என்னிடமிருந்த**
**பர்கரையும் கோக்கையும்**
**பறித்துச் சென்று**
**ஆவேசமாக உண்பதை**
**நான் நிதானமாக**
**படம் பிடித்துக் கொண்டிருந்தேன்"**

எனப் பாடுவார். இக்கவிதை அவரவர் உலகத்தின் அருமை அவரவர்க்கு புரிவதில்லை என்பதை மிக எளிமையாக படம் பிடித்துக் காட்டுகின்றார் என்றே சொல்லலாம். மனிதனோ விலங்கோ பிறர் உலகம் கண்டே வியக்கின்றார் தம் உலகின் பெருமை உணர்வதே இல்லை என்பதையே இக்கவிதை நமக்குப் புலப்படுத்துகிறது.

**அருவியின் தனிமை**

வனப்பாதையில் மலையில் தனிமையில் பயணித்த அருவி, தலையில் விழுந்து கடந்து நீண்ட தூரம் தனிமையிலே பயணிக்கிறது ஆனால்,

**"தலையில் விழும்**
**தருணத்தில் மட்டும்**
**அருவி**
**மனிதர்களின் பித்தேறிய**
**கூச்சலைக் கேட்கிறது**
**அருவியின் குரலில்**
**மனிதர்களுக்குப் பைத்தியம் பிடிக்கிறது**
**மனிதர்களின் குரலில்**
**அருவிக்குப் பைத்தியம் பிடிக்கிறது."**

தலையில் விழும் அருவியின் பேரிரைச்சலால் மனிதனுக்கும் மனிதனின் கூச்சலால் அருவிக்கும் பைத்தியம் பிடிக்கிறது என்ற மனுஷ்யபுத்திரனின் பரஸ்பர குற்றச்சாட்டு கவித்துவம் பெறுகிறது.

சங்ககாலந்தொட்டு இன்றுவரை இயற்கையை ஆராதிக்கும் கவிஞர்களின் நீட்சியாகவே மனுஷ்யபுத்திரனை நாம் காணமுடிகிறது. நம்மோடு பழகிப் பிரிந்தவருக்கு ஒரு கோப்பை வெயிலைத்தாருங்கள் அல்லது ஒரு துண்டு வெயிலை வெட்டித் தாருங்கள் என்று பாடும்பொழுது வெப்பம் நம் நெஞ்சில் எழுவதை நாம் உணரலாம் வெயிலை காம ரூபமாக பார்ப்பதும் நிலவை பெரிய மாத்திரையாக பார்ப்பதும் புதிய சிந்தனை எனலாம் மழை அன்பின் வடிவம் கருணையின் ஊற்று இப்படி பார்த்து பழகிப்போன நமக்கு வேட்டை நிலம் என்று பாடுவது நம்மை புதிய தளத்துக்கு அழைத்துச்செல்கிறது. இரண்டே இரண்டு மழைத்துளி கேட்டு ஒன்றை தானியத்துக்கும் மற்றொன்றைச் சொல்லுக்கும் தருவேன் என்ற மனுஷ்யபுத்திரனின் சிந்தனை நம்மை நெகிழச்செய்கிறது. இவரது கவிதைகள் காதல், காமம், குழப்பம், கோபம், வெறுப்பு, புரட்சி, போராட்டமென எல்லா நிலைகளிலும் இயற்கையோடு இணைந்து பயணிக்கின்றன என்பதற்கு சாட்சியாகும்.

**துணைநூற்பட்டியல்**

1.உயிர்மை , மே 2017 (மாத இதழ்)
2.மனுஷ்யபுத்திரன், இருளில் நகரும் யானை, உயிர்மை பதிப்பகம்,2016.
3. மனுஷ்யபுத்திரன், நீராலானது, உயிர்மை பதிப்பகம்,2007
4.மனுஷ்யபுத்திரன், அந்நிய நிலத்தின் பெண், உயிர்மை பதிப்பகம் 2014
5.மனுஷ்யபுத்திரன், அதீதத்தின் ருசி, உயிர்மை பதிப்பகம் 2011.